1981 ஜனவரி 31]

9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

178. திருநெல்வேலி மாவட்டத்தில் வெங்காயத்தை விலைக்கு வாங்குதல் மற்றும் விற்பனை செய்தலின் மீது கட்டுப்பாடு அறிவிப்பது குறித்து வேளாண்மைத் துறையின் 22.10.1980 ஆம் தேதியிடப்பெற்ற 2087 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு வேளாண்மை விளைபொருள் அங்காடிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 23/1959) 29 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

179. தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கடன் நிவாரண விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 24—11—1980 ஆம் தேதியிடப்பெற்ற 2614-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1980) 13 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

180. கோயமுத்தூர் மற்றும் குன்னூரில் உள்ள ஏல மையங்களில் விற்பனை செய்யப்படுகிற தேயிலையின் மீதான விற்பனை வரி வீதத்தைக் குறைப்பது குறித்து, வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 20—11—1980 ஆம் தேதியிடப் பெற்ற 1232 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச்சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

181. தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பணியாளர் அமைப்பு (கடைநிலை ஊழியர்களின் தகுதி மற்றும் பணியில் அமர்த்துதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 22—8—1980 ஆம் தேதியிடப்பெற்ற 1247 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. [தமிழ்நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1958) 199 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள்; ஏனைய தாள்கள்.

(19) பொதுக் கணக்குக் குழுவின் 1974—75 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப்பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் கூடுதலாகச் செலவழித்த தொகைகள் பற்றிய அறிக்கை (தமிழ்).